DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.8**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மாதுக்கண்ணன் |
| Father Name | : | பெரியசாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2025.

(1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 3 வது எதிரி இறந்துவிட்டார். )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது உசிலம்பட்டியில் குடியிருக்கிறேன். தற்போது பெரியார் பேருந்து நிலையம் அருகில் பூக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான், அந்த கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. **(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 13.01.2016 ம் தேதி 14.30 மணிக்கு திடீர் நகர் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும் திருப்பதி

என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றும், அதே தேதியில் 14.45 மணிக்கு சம்பவயிடத்தில் TN 65 E 2325 Tata Sumo Car ஒன்றையும் மூன்று கற்களையும் அத்தாட்சியில் காவல் ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.